# கிராமப்புற கோயில்களுக்கு நிதியை வாரி வழங்கிய முதல்வர்!

## பேரவையில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவிப்புகள்... 4-ஆம் பக்கத் தொடர்ச்சி

வருகை புரியும் மாற்றுத்திறனாளி பக்தர்கள் கட்டணமில்லாமல், தரிசனம் செய்ய அனுமதிக்கப்படுவர்.

**வெளிநாடு வாழ் பக்தர்களுக்கு சிறப்பு உதவி மையம்**

**40.** வெளிநாடுகளில் இருந்து வரும் பக்தர்களுக்கு 48 முதுநிலைத் திருக்கோயில்களில் இறை தரிசனத்திற்கு உதவிட 24 மணி நேரமும் செயல்படுகின்ற உதவி மையம் ஆணையர் அலுவலகத்தில் ஏற்படுத்தப்படும். (பட்டியல் இணைப்பு)

**தொடுதிரை வசதியுடன் தகவல் பெட்டி**

**41.** திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்கள் அருகாமையில் உள்ள திருக்கோயில்களை அறிந்து கொள்வதற்கு வசதியாக தொடுதிரை வசதியுடன் கூடிய தகவல் பெட்டி கீழ்க்கண்ட 10 திருக்கோயில்களில் அமைக்கப்படும்.

i) பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில்

ii) மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்

iii) திருவரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில்

iv) மயிலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில்

v) காஞ்சிபுரம் அருள்மிகு தேவராஜசுவாமி திருக்கோயில்

vi) சுவாமிமலை அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில்

vii) பேரூர் அருள்மிகு பட்டீசுவரர் திருக்கோயில்

viii) திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேசுவரர் திருக்கோயில்

ix) சுசீந்திரம் அருள்மிகு தாணுமாலயசுவாமி திருக்கோயில்

x) புன்னைநல்லூர் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில்

நட்சத்திர மரக்கன்றுகள் நடும் திட்டம்

**42.** திருக்கோயில்களில் அமையப்பெற்றுள்ள நந்தவனங்களில் 27 நட்சத்திரங்களுக்கு உரித்தான மரக்கன்றுகள் கீழ்க்கண்ட 10 திருக்கோயில்களில் நடப்படும்.

i) திருவண்ணாமலை, அருள்மிகு அருணாச்சலேசுவரர் திருக்கோயில்

ii) மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்

iii) கோபிச்செட்டிப்பாளையம், பவளமலை, அருள்மிகு முத்துக்குமாரசுவாமி திருக்கோயில்

iv) கன்னியாகுமாரி மாவட்டம், தேரூர், அருள்மிகு குறண்டி கோரக்கநாத சுவாமி திருக்கோயில்

v) காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில்

vi) விருத்தாச்சலம் அருள்மிகு விருத்தகிரீசுவரர் திருக்கோயில்

vii) திருவெண்காடு அருள்மிகு சுவேதாரண்யேசுவரர் திருக்கோயில்

viii) நாகப்பட்டினம் அருள்மிகு காயாரோகணசுவாமி திருக்கோயில்

ix) வேதாரண்யம் அருள்மிகு வேதாரண்யேசுவரர் திருக்கோயில்

x) பண்பொழி அருள்மிகு திருமலைக்குமாரசுவாமி திருக்கோயில்

**மரக்கன்று நடுதல்**

**43.** திருக்கோயில்களுக்கு சொந்தமான பயன்பாட்டில் இல்லாத நிலங்களில், 20 இணை ஆணையர் மண்டலத்திற்கு தலா 1 இலட்சம் வீதம் சமூக ஆர்வலர்கள் மற்றும் கார்ப்பரேட் சமூக பொறுப்பு நிதி வழங்கும் நிறுவனங்கள் மூலம் பனை, இலுப்பை உள்ளிட்ட நாட்டு மரக்கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்படும்.

**ஆன்மிகப் பயணம்**

இராமேசுவரம் - காசி ஆன்மிகப்பயணம்

**44.** ஆன்மிகப் பயணமாக இராமேசுவரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலிருந்து காசி அருள்மிகு விசுவநாதசுவாமி திருக்கோயிலுக்கு கடந்த மூன்று ஆண்டுகளில் 60 வயது முதல் 70 வயதிற்கு உட்பட்ட 920 பக்தர்கள் அரசு நிதி ரூ.2.30 கோடி செலவில் அழைத்துச் செல்லப்பட்டனர். பெருவாரியான பக்தர்கள் இந்த பயணத்தை மேற்கொள்ள விருப்பம் தெரிவிப்பதால், இவ்வாண்டு 600 பக்தர்கள் அழைத்துச் செல்லப்படுவர். இதற்கான செலவினம் ரூ.1.50 கோடி அரசு நிதியாக வழங்கப்படும்.

**அறுபடை வீடுகள் - ஆன்மிகப் பயணம்**

**45.** தமிழ்க் கடவுளான முருகப் பெருமானின் அறுபடை வீடுகளுக்கு ஆண்டுக்கு 60 வயது முதல் 70 வயதிற்கு உட்பட்ட பக்தர்களை ஆன்மிகப் பயணமாக அரசு நிதியில் அழைத்து செல்லும் திட்டம் செயல்படுத்தப்பட்டு இதுவரை 2,000 பக்தர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். தற்போது பக்தர்களின் ஆர்வத்தை கருத்தில் கொண்டு, இவ்வாண்டு 2,000 பக்தர்கள் அறுபடை வீடுகளுக்கு ஆன்மிகப் பயணம் அழைத்துச் செல்லப்படுவர். இதற்கான செலவினத்தொகை ரூ.2.50 கோடி அரசு நிதியாக வழங்கப்படும்.

**அம்மன் திருக்கோயில்களில் ஆன்மிகப் பயணம்**

**46.** ஆடி மாதத்தில் பிரசித்தி பெற்ற அம்மன் திருக்கோயில்களுக்கு ஆண்டு தோறும்

60 வயது முதல் 70 வயதிற்கு உட்பட்ட 1,000 பக்தர்களை ஆன்மிகப் பயணமாக அழைத்துச் செல்லும் திட்டம் கடந்த ஆண்டு முதல் அரசு நிதி மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாண்டு 2,000 பக்தர்கள் அம்மன் திருக்கோயில்களுக்கு ஆன்மிகப் பயணம் அழைத்துச் செல்லப்படுவர். இதற்கான செலவினத்தொகை ரூ.50 இலட்சம் அரசு நிதியாக வழங்கப்படும்.

**வைணவ திருக்கோயில்களில் ஆன்மிகப் பயணம்**

**47.** புரட்டாசி மாதத்தில் பிரசித்தி பெற்ற வைணவத் திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் 60 வயது முதல் 70 வயதிற்கு உட்பட்ட 1,000 பக்தர்களை ஆன்மிகப் பயணமாக அழைத்துச் செல்லும் திட்டம் கடந்த ஆண்டு முதல் அரசு நிதி மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாண்டு அரசு நிதியில் 2,000 பக்தர்கள் வைணவத் திருக்கோயில்களுக்கு ஆன்மிகப் பயணம் அழைத்துச் செல்லப்படுவர். இதற்கான செலவினத்தொகை ரூ.50 இலட்சம் அரசு நிதியாக வழங்கப்படும்.

**மானசரோவர் ஆன்மிகப் பயணம்**

**48.** திருக்கயிலாய மானசரோவர் ஆன்மிகப் பயணம் செல்லும் 500 பக்தர்களுக்கு வழங்கப்பட்டு வந்த அரசு மானியம் ரூ.50,000/-லிருந்து ரூ.1,00,000/- ஆக உயர்த்தி வழங்கப்படும், இதற்கான நிதி ரூ.5 கோடி அரசால் வழங்கப்படும்.

முக்திநாத் ஆன்மிகப் பயணம்

**49.** முக்திநாத் புனிதத் தலத்திற்கு ஆன்மிகப் பயணம் செல்லும் 500 பக்தர்களுக்கு அரசு மானியம் ரூ.20,000/-லிருந்து ரூ.30,000/- ஆக உயர்த்தி வழங்கப்படும். இதற்கான நிதி ரூ.1.50 கோடி அரசால் வழங்கப்படும்.

**பயிற்சித் திட்டம்**

**50.** இந்து சமய அறநிலையத்துறை அலுவலர்களுக்கு பழமையான திருக்கோயில்களை புனரமைத்தல், பாதுகாத்தல் குறித்தும், கருங்கல் மற்றும் உலோகத் திருமேனிகள், கல்வெட்டுகள், ஓலைச் சுவடிகள், செப்பேடுகள் மற்றும் புராதன கலைப் பொருட்கள் பாதுகாத்தல் குறித்தும் மாநிலத் தொல்லியல் துறை மூலம் ஆண்டுக்கு 4 முறை பயிற்சி வழங்கப்படும்.

**51.** திருக்கோயில்களில் இறைவன் மற்றும் இறைவியருக்கு இறையமுது தயாரிக்கும் பணியாளர்களுக்கும், அன்னதான சமையல் பணியாளர்கள் மற்றும் திருக்கோயிலில் பக்தர்களுக்கு வழங்கப்படும் பிரசாதம் தயாரிக்கும் பணியாளர்களுக்கும் உணவு பாதுகாப்புத் துறை மற்றும் தேர்ந்த முதுநிலை மடப்பள்ளி பரிச்சாரகர்கள் மூலம் ஆண்டுக்கு 4 முறை திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்படும்.

## விடுதி மாணவர்களுக்கு கட்டணமில்லா உணவு!

**52.** கிராமக்கோயில் பூசாரிகளுக்கு பூசை முறைகளில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி ஒரு வார காலம் அளிக்கப்படும்.

**மருத்துவ மையம்**

**53.** அதிக அளவில் பக்தர்கள் வருகை புரியும் 19 திருக்கோயில்களில் மருத்துவ மையங்கள் ஏற்படுத்தப்பட்டு பக்தர்கள் பயன்பாட்டில் இருந்து வருகின்றன. இந்த ஆண்டு கூடுதலாக

i) கோவை மாவட்டம், பேரூர், அருள்மிகு பட்டீசுவரசுவாமி திருக்கோயில்

ii) திருவள்ளூர் மாவட்டம், சிறுவாபுரி அருள்மிகு பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

ஆகிய 2 திருக்கோயில்களில் மருத்துவ மையங்கள் அமைக்கப்படும்.

**திருக்கோயில் பணியாளர்கள் நலன் பொங்கல் கருணைக் கொடை**

**54.** துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வு பெற்ற திருக்கோயில் பணியாளர்களுக்கு பொங்கல் கருணைக் கொடை ரூ.1000/- வழங்கப்பட்டு வருகிறது. ஓய்வு பெற்ற பணியாளர்கள் நலன் கருதி தற்போது வழங்கப்பட்டு வரும் ரூ.1000/- பொங்கல் கருணைக் கொடை ரூ.2000/- ஆக உயர்த்தி வழங்கப்படும்.

துறை நிலையிலான குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு பொங்கல் கருணைக் கொடை ரூ.1000/- வழங்கப்பட்டு வருகிறது. தற்போது வழங்கப்பட்டு வரும் ரூ.1000/- பொங்கல் கருணைக் கொடை ரூ.2000/- ஆக உயர்த்தி வழங்கப்படும்.

**55.** திருக்கோயிலில் பணிபுரிந்து ஓய்வு பெற்று, பணியாளர் சேமநலநிதி நிறுவனம் (EPF) மூலம் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு முதல்முறையாக பொங்கல் கருணைக்கொடை ரூ.2000/- வழங்கப்படும்.

திருக்கோயிலில் பணிபுரிந்து ஓய்வு பெற்று, பணியாளர் சேமநலநிதி நிறுவனம் (EPF) மூலம் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு முதல்முறையாக பொங்கல் கருணைக்கொடை ரூ.2000/- வழங்கப்படும்.

**குடும்ப நலநிதி**

**56.** பணிக்காலத்தில் இயற்கை எய்திய திருக்கோயில் பணியாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் ரூ.3 இலட்சம் குடும்பநல நிதியானது ரூ.4 இலட்சமாக உயர்வு செய்யப்படும்.

**ஓய்வூதியம்**

**57.** திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்று, துறைநிலை ஓய்வூதியம் பெறும் திருக்கோயில் பணியாளர்களுக்கு தற்போது ரூ.4,000/- ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஓய்வூதியம் ரூ.4,000/- லிருந்து ரூ.5,000/-ஆக உயர்வு செய்யப்படும்.

துறை நிலை குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு தற்போது

ரூ.2,000/- ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஓய்வூதியம் ரூ.2,000/-லிருந்து ரூ.2,500/- ஆக உயர்வு செய்யப்படும்.

**58.** திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்று, EPF ஓய்வூதியம் பெறும் திருக்கோயில் பணியாளர்கள் தற்போது ரூ.900/- முதல் ரூ.2,190/- வரை மட்டுமே ஓய்வூதியமாக பெற்று வருகின்றனர். இவர்களுக்கு துறை நிலையிலான ஓய்வூதியம் பெறும் பணியாளர்களுக்கு இணையாக கருணைத்தொகை ( EX - gratia) வழங்கப்படும். இத்தொகை ஆணையர் அலுவலகத்தில் பேணப்படும் மையநிதி வட்டித் தொகையிலிருந்து வழங்கப்படும். மேலும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கும் கருணைத் தொகை வழங்கப்படும்.

ஓதுவார், வேதபாராயணர், திவ்யபிரபந்தம் பாடுவோர், அரையர், அர்ச்சகர் மற்றும் இசைக் கலைஞர்கள் ஓய்வூதியம்

**59.** திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற ஓதுவார், வேதபாராயணர், திவ்யபிரபந்தம் பாடுவோர், அரையர், அர்ச்சகர், மற்றும் இசைக் கலைஞர்களுக்கு அரசு நிதி மூலம் மாதந்தோறும் ரூ.3,000/- ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இவர்களுக்கான ஓய்வூதியம் ரூ.3,000/-லிருந்து ரூ.4,000/-ஆக உயர்த்தி வழங்கப்படும். இதற்கு தேவையான அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**இருசக்கர வாகனக் கடன் உயர்வு**

**60.** திருக்கோயில் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் இருசக்கர வாகனக் கடன் ரூ.20,000/-லிருந்து ரூ.50,000/-ஆக உயர்த்தி வழங்கப்படும். இக்கடன் தொகையில் ரூ.5,000/- மட்டும் அந்தந்த திருக்கோயில் நிதியிலிருந்து மானியமாக வழங்கப்படும்.

**61.** திருக்கோயில் பணியாளர்கள் பணியில் இருக்கும்போது இயற்கை எய்தினால் இறுதிச் சடங்கு செய்வதற்கு குடும்ப நலநிதியிலிருந்து வழங்கப்படும் முன்பணம் ரூ.2,000/-லிருந்து ரூ.10,000/-ஆக உயர்த்தி வழங்கப்படும்.

**ஓய்வு பெற்ற கிராமக்கோயில் பூசாரிகள் எண்ணிக்கை உயர்வு**

**62.** துறைக் கட்டுப்பாட்டில் இல்லாத கிராமக் கோயில்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற பூசாரிகளுக்கான ஓய்வூதியத் திட்டத்தில் ஓய்வூதியம் பெறும் தகுதி வாய்ந்த கிராமக்கோயில் பூசாரிகளின் எண்ணிக்கை 4,000 லிருந்து 5,000 ஆக உயர்த்தப்படும்.

**பூசாரிகள் நலவாரிய உறுப்பினர் பதிவுசெய்தல்**

**63.** பூசாரிகள் நலவாரியத்தில், உறுப்பினராக பதிவு செய்திட ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.72,000 லிருந்து ரூ.1 இலட்சமாக உயர்த்தப்படும். தற்பொழுது உள்ள நலவாரிய உறுப்பினர்களுடன் புதிய உறுப்பினர் சேர்க்கைக்கு மூன்று மாத கால அவகாசம் வழங்கப்பட்டு சிறப்பு முகாம் நடத்தி பதிவு சேர்க்கை நிறைவடைந்தவுடன், ஒரு கால பூசைத் திட்ட திருக்கோயில் அர்ச்சகர்களுக்கு வழங்கப்படும் ஊக்கத்தொகைக்கு நிகரான ஊக்கத்தொகை பூசாரி நலவாரிய உறுப்பினர்களுக்கும் வழங்கப்படும்.

**பதிப்பகம்**

**64.** இந்து சமய அறநிலையத்துறை சார்பாக நடத்தப்படும் பதிப்பகப்பிரிவின் மூலம் இதுவரை 516 அரிய ஆன்மிக நூல்கள் மறுபதிப்பு செய்து வெளியிடப்பட்டுள்ளன. இவ்வாண்டும் ஆன்மிக நூல்கள், சமய நூல்கள், கையடக்கச் சிற்றேடுகள், இறைத்துதிப் பாடல்கள், பாராயணப் புத்தகங்கள், வழிகாட்டிக் கையேடுகள் உட்பட 300 அரிய நூல்கள் வெளியிடப்படும்.

**கல்வி உதவித் தொகை**

**65.** ஒருகால பூசைத் திட்ட திருக்கோயில்களில் பணியாற்றும் அர்ச்சகர்களின் பிள்ளைகள் நலன் கருதி, இவ்வாண்டு 600 மாணவர்களின் மேற்படிப்பிற்காக ஆண்டொன்றுக்கு தலா ரூ.10,000/- கல்வி உதவித் தொகை வழங்கப்படும்.

**கல்வி மற்றும் தொண்டு நிறுவனங்கள் பயிற்சிப் பள்ளிகள்**

**66.** வடபழநி, அருள்மிகு வடபழநி யாண்டவர் திருக்கோயிலில் ஓதுவார் பயிற்சி நிலையம் பகுதி நேர வகுப்பாக நடத்தப்படும்.

**67.** மதுரை மாவட்டம், சோலை மலை மண்டபம், அருள்மிகு முருகன் திருக்கோயில் மற்றும் இராமநாதபுரம் மாவட்டம், இராமேசுவரம், அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில் ஆகிய இரண்டு திருக்கோயில்களின் சார்பாக தவில் மற்றும் நாதசுவர பயிற்சிப் பள்ளிகள் புதியதாக தொடங்கப்படும்.

**ஊக்கத்தொகை உயர்வு**

**68.** அனைத்து பயிற்சிப் பள்ளிகளில் முழுநேர வகுப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு ஊக்கத்தொகையாக 2022 ஆம் ஆண்டு வரை ரூ.1,000/- வழங்கப்பட்டு வந்தது. 2023 ஆம் ஆண்டு முதல் ரூ.3,000/-ஆகவும், 2024 ஆண்டு முதல் ரூ.4,000/-ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டது. இந்த ஆண்டு முதல் ரூ.10,000/- ஆக உயர்த்தி வழங்கப்படும்.

அனைத்து பயிற்சிப் பள்ளிகளில் பகுதி நேர வகுப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு ஊக்கத்தொகையாக 2023 ஆம் ஆண்டு முதல் ரூ.1,500/- ஆக வழங்கப்பட்டு வந்ததை,

2024 ஆம் ஆண்டு முதல் ரூ.2,000/-ஆக வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு முதல் ரூ.5,000/- ஆக உயர்த்தி வழங்கப்படும்.

**பள்ளி, கல்லூரி பணிகள்**

**69.** பழனி, அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரியில் உள் விளையாட்டு அரங்கம் அமைக்கும் பணி ரூ.5 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**70.** பழனி, சின்னக்கலையம்புத்தூர், அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலை கல்லூரியில் குறிஞ்சி விடுதி புதுப்பித்தல் (மராமத்து) பணி, மாணவியர் விடுதியைச் சுற்றிலும் சுற்றுச் சுவர் கட்டுதல் மற்றும் முதல் தளம் மற்றும் இரண்டாம் தளங்களில் பாதுகாப்பு வேலி அமைக்கும் பணிகள் ரூ.2 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**71.** பழனி, அருள்மிகு பழனியாண்டவர் பாலிடெக்னிக் கல்லூரியில் பழைய விடுதி கட்டடத்தை இடித்து புதிய விடுதி ரூ.5 கோடியில் கட்டப்படும்.

**72.** இந்து சமய அறநிலையத்துறை சார்பில் நடத்தப்படும் கல்லூரிகள் மற்றும் பள்ளிகளில் ரூ.2.44 கோடியில் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்படும். (பட்டியல் இணைப்பு)

**73.** இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்கள் சார்பாக நடத்தப்படும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயின்று வரும் 22,920 மாணாக்கர்களுக்கு கட்டணமில்லா கண் பரிசோதனை மேற்கொள்ளப்படும்.

**74.** இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்கள் சார்பாக நடத்தப்படும் 14 பள்ளிகள் மற்றும் 10 கல்லூரிகளில் பயின்று வரும் 16,801 மாணாக்கர்களுக்கு கல்வி உபகரணங்களான புத்தகப்பை, நோட்டு, பேனா, பென்சில், டிபன் பாக்ஸ், தண்ணீர் பாட்டில் ஆகியன ரூ.1.59 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**75.** தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்கள் மூலம் நடத்தப்படும் 9 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கல்வெட்டியல் 6 மாத கால சான்றிதழ் படிப்பு தொடங்கப்படும்.

**செவிலியர் கல்லூரிகள்**

**76.** திருக்கோயில்கள் சார்பாக 19 திருக்கோயில்களில் மருத்துவ முதலுதவி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் ஒரு சில மையங்களில் ஒரு செவிலியரும் மற்ற மையங்களில் 2 செவிலியர்கள் மட்டும் பணியில் உள்ளனர். திருக்கோயில்களில் திருவிழா மற்றும் கூட்ட நெரிசல் உள்ள காலங்களில் மருத்துவ முதலுதவி தேவைப்படும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், அவர்களின் தேவையை, தற்போது குறைந்த எண்ணிக்கையில் பணியிலுள்ள செவிலியர்களால் முழுமையாக பூர்த்தி செய்ய இயலவில்லை. வருங்காலங்களில் தேவையின் அடிப்படையில், மேலும் பல திருக்கோயில்களில் புதிய மருத்துவ முதலுதவி மையங்கள் துவங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதால், செவிலியர்களின் தேவையை பூர்த்தி செய்யும் வண்ணம் திருக்கோயில்களின் அறங்காவலர் குழுவின் கோரிக்கையின்படி

I. திருச்சி, சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் சார்பாக இத்திருக்கோயிலுக்கு சொந்தமான இடத்தில் புதிதாக ஒரு செவிலியர் கல்லூரியும்,

II. காஞ்சிபுரம், அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில் சார்பாக சென்னை, கீழ்ப்பாக்கம், பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள இத்திருக்கோயிலுக்கு சொந்தமான இடத்தில் புதிதாக ஒரு செவிலியர் கல்லூரியும் அமைக்கப்படும்.

மேற்கண்ட கல்லூரிகளில் செவிலியர்களுக்கு கனிவு மற்றும் கருணை பண்புகளை வளர்த்திட இந்து சமயம் சார்ந்த பாடங்களும் கற்பிக்கப்படும்.

**கோயில் கட்டடக் கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரி**

**77.** திருக்கோயில் திருப்பணிகளை மேற்கொள்ள அதிக அளவில் ஸ்தபதிகள் தேவையை கருத்திற்கொண்டு திருச்சி, திருவரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் சார்பாக இத்திருக்கோயிலின் உபகோயிலான திருவெள்ளரை, அருள்மிகு புண்டரீகாட்ச பெருமாள் திருக்கோயிலுக்கு சொந்தமான இடத்தில் திருக்கோயில் நிர்வாகத்தின் கோரிக்கையின்படி புதிதாக, கோயில் கட்டடக் கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரி அமைக்கப்படும்.

**பல்தொழில்நுட்பக் கல்லூரி**

**78.** இத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் ஆயிரக்கணக்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவற்றை கண்காணித்திடவும், திருக்கோயில்களுக்கு சொந்தமான கட்டிடங்களை தொடர்ந்து பராமரித்திடவும், தகுதிவாய்ந்த பொறியாளர்களை உருவாக்கும் வண்ணம், கோயம்புத்தூர் மாவட்டம், மருதமலை, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் சார்பாக இத்திருக்கோயிலின் உபகோயிலான பேரூர் வட்டம், வடவள்ளி, அருள்மிகு கரிவரதராஜப்பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் திருக்கோயில் அறங்காவலர் குழுவின் கோரிக்கையின்படி புதிதாக ஒரு பல்தொழில்நுட்பக் கல்லூரி (பாலிடெக்னிக் கல்லூரி) அமைக்கப்படும். இக்கல்லூரியில் இந்து சமயம் சார்ந்த பாடங்கள், சிற்பக்கலை மற்றும் கோயில் கட்டடக் கலை தொடர்பான பாடங்கள் கற்பிக்கப்படும்.

**விடுதி மாணாக்கர்களுக்கு கட்டணமில்லா உணவு**

**79.** பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் சார்பாக இயங்கும் பள்ளி, கல்லூரிகளில் விடுதி மாணவ மாணவியருக்கு அனைத்து நாட்களிலும் மூன்று வேளையும் கட்டணமில்லா உணவு வழங்கப்படும்.

**80.** திருநெல்வேலி அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதியம்மன் திருக்கோயில் சார்பாக நடத்தப்பட்டு வரும் ஸ்ரீ காந்திமதியம்மாள் மகளிர் மேல்நிலைப்பள்ளியில் உள்ள தங்கும் விடுதியில் 100 மாணவியருக்கு கட்டணமில்லாமல் உறைவிடம் மற்றும் உணவு வழங்கப்படும்.

**அரசு மானியம்**

**81.** கன்னியாகுமரி மாவட்டம் இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத

490 திருக்கோயில்களின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு செலவினத்திற்காக தற்போது ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வரும் அரசு மானியத் தொகை ரூ.13 கோடியிலிருந்து

**ரூ.18 கோடியாக உயர்த்தி வழங்கப்படும்.**

**82.** புதுக்கோட்டை தேவஸ்தான நிர்வாகத்தில் உள்ள 225 திருக்கோயில்களின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு செலவினத்திற்காக தற்போது ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வரும் அரசு மானியத் தொகை ரூ.8 கோடியிலிருந்து ரூ.10 கோடியாக உயர்த்தி வழங்கப்படும்.

**83.** தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தான நிர்வாகத்தில் உள்ள 88 திருக்கோயில்களின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு செலவினத்திற்காக தற்போது ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வரும் அரசு மானியத் தொகை ரூ.6 கோடியிலிருந்து ரூ.8 கோடியாக உயர்த்தி வழங்கப்படும்.

**84.** திருக்கோயில் திருப்பணிகளுக்காக தற்போது ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வரும் அரசு மானியத் தொகை ரூ.6 கோடியிலிருந்து ரூ.10 கோடியாக உயர்த்தி வழங்கப்படும்.

**உலகிலேயே மிக உயரமான முருகன் சிலை நிறுவுதல்**

**85.** கோவை மாவட்டம், மருதமலை, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் ரூ.110 கோடி மதிப்பீட்டில் அருங்காட்சியகம், வாகன நிறுத்துமிடம் அடிப்படை வசதிகளுடன் அறுங்கோண வடிவத்தில் அமைக்கப்படும் புல்வெளி நில அமைவிற்கு மத்தியில் புதியதாக 184 அடி உயர முருகன் சிலை அமைக்கப்படும்.

**86.** ஈரோடு மாவட்டம், திண்டல், அருள்மிகு வேலாயுதசுவாமி திருக்கோயிலில்

ரூ.30 கோடி மதிப்பீட்டில் புதியதாக 180 அடி உயர முருகன் சிலை அமைக்கப்படும்.

**87.** இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு வட்டம், குமரகிரி, திமிரி, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் ரூ.6.83 கோடி மதிப்பீட்டில் புதியதாக 114 அடி உயர முருகன் சிலை அமைக்கப்படும்.

**கடல் அரிப்பை தடுக்கும் பணி**

**88.** திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் கடற்கரை பரப்பினை கடல் அரிப்பிலிருந்து தடுக்கும் பொருட்டும், புனித நீராடும் பக்தர்களின் நலன் கருதியும், நீர்வளத்துறையின் கடல் அரிப்பு தடுப்பு பிரிவு மூலம், ரூ.15 கோடி அரசு நிதி மற்றும்

ரூ.15 கோடி திருக்கோயில் நிதி ஆக மொத்தம் ரூ.30 கோடி மதிப்பீட்டில் கடல் அரிப்பை தடுக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

**பக்தர்களுக்கு குடிநீர் வசதி ஏற்படுத்துதல்**

**89.** திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்கு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் கொள்ளிடம் ஆற்றிலிருந்து நாள்தோறும் 10 இலட்சம் லிட்டர் தண்ணீர் கொண்டு வரும் பணி

ரூ.16 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**புதிய இராஜகோபுரங்கள்**

**90.** தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், தேரிக்குடியிருப்பு, அருள்மிகு கற்குவேல் அய்யனார் திருக்கோயிலில் ரூ.12 கோடி மதிப்பீட்டில் கருங்கல் முன்மண்டபத்துடன் கூடிய புதிய ஏழு நிலை இராஜகோபுரம் கட்டப்படும்.

**91.** ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம் மற்றும் நகர் அருள்மிகு செல்லாண்டியம்மன் திருக்கோயிலில் புதிய ஐந்து நிலை இராஜகோபுரம் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

**92.** செங்கல்பட்டு மாவட்டம் மற்றும் வட்டம், திருக்கச்சூர், அருள்மிகு மருந்தீசுவரர் மற்றும் தியாகராஜசுவாமி (தாழக்கோயில்) திருக்கோயிலில் புதிய ஏழு நிலை இராஜகோபுரம்

**ரூ.2 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.**

**93.** தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், தென்கரை, அருள்மிகு கௌமாரி அம்மன் திருக்கோயிலில் புதிய ஐந்து நிலை இராஜகோபுரம் ரூ.2 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

**94.** தூத்துக்குடி மாவட்டம், பசுவந்தனை, அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலில் புதிய ஐந்து நிலை இராஜகோபுரம் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

**95.** செங்கல்பட்டு மாவட்டம் மற்றும் வட்டம், திருக்கச்சூர், அருள்மிகு மருந்தீசுவரர் மற்றும் தியாகராஜசுவாமி (மலைக்கோயில் மேற்குபுறம்) திருக்கோயிலில் புதிய ஐந்து நிலை இராஜகோபுரம் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

**96.** சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், கண்டரமாணிக்கம், அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலில் புதிய மூன்று நிலை இராஜகோபுரம் ரூ.1.16 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

**97.** செங்கல்பட்டு மாவட்டம் மற்றும் வட்டம், திருக்கச்சூர், அருள்மிகு மருந்தீசுவரர் மற்றும் தியாகராஜசுவாமி (மலைக்கோயில் தெற்குபுறம்) திருக்கோயிலில் புதிய மூன்று நிலை இராஜகோபுரம் ரூ.1 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

**98.** செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் வட்டம், மாம்பாக்கம், அருள்மிகு முருகநாதீசுவரர் திருக்கோயிலில் புதிய மூன்று நிலை இராஜகோபுரம் ரூ.1 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

**99.** திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், அய்யம்பேட்டை, அருள்மிகு செட்டியப்பர் எனும் சுந்தரேசுவரர் திருக்கோயிலில் புதிய மூன்று நிலை இராஜகோபுரம் ரூ.1 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

**100.** 4 திருக்கோயில்களில் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் புதியதாக மூன்று

தொடர்ச்சி 6–ஆம் பக்கம்